## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் - 2014

---

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2014 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(6) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2014 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 2.2 நிதிக்கூற்றுக்கள்

---

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன 2016 செப்தம்பர் 09 ஆந் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகளைப் பராமரித்தல்

---

கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடாத்திச் செல்லப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்குரிய கணக்கேடுகளும் பதிவேடுகளும் பேணப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் இருப்பு

---

கூட்டுத்தாபனத்தினால் இறுதியாக தயாரிக்கப்பட்டிருந்த 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சொத்துக்கள் | பெறுமதி |
| --- | --- |
| | ரூபா |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 5,805,009,280 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 161,866,142 |
| மொத்தச் சொத்துக்கள் | 5,966,875,421 |
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 1,179,046,151 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | 233,890,743 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 1,412,936,894 |
| தேறிய சொத்துக்கள் / உரிமை | 4,553,938,529 |
| மொத்த பொறுப்புக்கள் | 5,966,875,421 |
| | |
| மொத்த வருமானம் | 655,699,345 |
| மொத்தச் செலவினம் | 873,483,759 |
| பற்றாக்குறை | 217,784,413 |

## 2.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் இன்மை

பின்வரும் விடயங்களுக்கு எதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்றுகள் |
| --- | --- | --- |
| எரிபொருள் செலவினம் | 114,069 | பற்றுச்சீட்டுக்கள் மற்றும் ஓட்ட அட்டவணைகள் |
| எழுதுகருவி செலவினங்கள் | 305,299 | பற்றுச்சீட்டுக்கள் |
| தொழிலாளர் கூலி | 705,010 | தொழிலாளரை வழங்குவதற்குரிய உடன்படிக்கை |

## 2.5 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங் களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- | --- |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையினது XXVIII ஆம் அத்தியாயத்தின் 1 ஆம் பிரிவு மற்றும் 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | வருகை மற்றும் வெளியேறல் என்பவற்றை உறுதிப்படுத்தாமலும் உரிய கடமைகளை நிறைவேற்றாமலும் உத்தியோகத்தரொருவருக்கு மீளாய்வாண்டில் யூலை மாதத்திலிருந்து ஆகஸ்ட் வரை ரூபா 43,608 தொகை சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 7.1 ஆம் பந்தி | தோட்ட அத்தியட்சகரொருவர் மீளாய்வாண்டின் செப்தம்பர் 30 ஆந் திகதி முதல் விடுமுறை அங்கீகரிக்கப்படாது சேவைக்கு வராமல் இருந்த போதிலும் அதன் பொருட்டு தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 137 | கொடுப்பனவு அங்கீகரிக்கப்படாது ரூபா 14,298,894 பெறுமதியான காசோலைகள் வரையப்பட்டிருந்தன. |
| (ஈ) | 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2006 ஒக்தோபர் 09 ஆந் திகதிய பீஈடீ/39 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்தில்லாத உத்தியோகத்தரொரு வருக்கு மீளாய்வாண்டில் 05 மாதங்களுக்கு தனிப்பட்ட நடவடிக்கைகளுக்காக வாகனமொன்று வழங்கப்பட்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற 12 தோட்டங்களுக்குரிய 2013 மற்றும் மீளாய்வாண்டில் ஒரு ஹெக்டேயருக்கான பூர்த்திசெய்யப்பட்ட தேயிலையின் அறுவடை கீழே காட்டப்பட்டுள்ளது.

| தோட்டங்கள் | காணியின் அளவு | ஒரு ஹெக்டேயருக்கான பூர்த்தி செய்யப்பட்ட தேயிலை அறுவடை | | |
|---|---|---|---|---|
| | ஹெக்டேயர் | 2014 கி.கி | 2013 கி.கி | வேறுபாடு கி.கி |
| ஓபல்கல | 104 | 633 | 854 | (221) |
| கல்பிஹில்ல | 235 | 629 | 821 | (192) |
| கோமார | 165 | 671 | 723 | (52) |
| ரங்கல | 215 | 549 | 700 | (151) |
| ஹாகல | 252 | 596 | 693 | (97) |
| கலேபொக்க | 583 | 506 | 662 | (156) |
| ஹுன்னஸ்கிரிய | 207 | 469 | 608 | (139) |
| அலகொல்ல | 338 | 499 | 572 | (73) |
| மிட்லேண்ட் | 259 | 448 | 529 | (81) |
| ஹெயாபார்க் | 204 | 274 | 351 | (77) |
| கொட்டகஹ | 185 | 228 | 301 | (73) |
| நிக்கொலஓய | 92 | 381 | 451 | (70) |
| | 2,839 | 5,883 | 7,269 | (1,382) |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒரு ஹெக்டேயருக்கான பூர்த்திசெய்யப்பட்ட சராசரி நியம தேயிலை அறுவடை அண்ணளவாக 1736.5 கிலோகிராம் ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டினது தரவுகளின் பிரகாரம் தோட்டங்களில் அப்பெறுமதி 228 கிலோகிராம் முதல் 671 கிலோகிராம் வரையான வீச்சில் காணப்பட்டதுடன், அனைத்து தோட்டங்களிலும் ஒரு ஹெட்டேயருக்கான பூர்த்திசெய்யப்பட்ட தேயிலையின் அறுவடை 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது 19 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் பூர்த்திசெய்யப்பட்ட தேயிலை உற்பத்தி அண்ணளவாக 1,762,301 கிலோ கிராம்களாக இருந்ததுடன் மீளாய்வாண்டில் அது 1,402,229 கிலோ கிராம்களாக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக தேயிலை உற்பத்தி 360,072 கிலோ கிராம்களால் அதாவது 20 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்தின் தேயிலை பயிரிடப்பட்டுள்ள காணியின் அளவான 2,839 ஹெக்டேயர் மூலம் வருடாந்த உற்பத்தி செய்யப்பட வேண்டிய நியம உற்பத்தி தேயிலையின் அளவு 4,926,451 கிலோகிராமாக இருக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் அதில் 28 சதவீதம் அல்லது 1,402,229 கிலோகிராம் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

(ஈ) 2013 மற்றும் மீளாய்வாண்டில் வெளித்தரப்பு பெருந்தோட்ட செய்கையாளருக்கு வழங்கப்பட்ட காணியின் அளவு மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த பூர்த்தி செய்யப்பட்ட தேயிலை உற்பத்தி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தோட்டத்தின் பெயர் | 2014<br>காணியின் அளவு | <br>பூர்த்திசெய்யப்பட்ட தேயிலை உற்பத்தி | 2013<br>காணியின் அளவு | <br>பூர்த்திசெய்யப்பட்ட தேயிலை உற்பத்தி |
|---|---|---|---|---|
| | (ஹெக்டேயர்) | (கி.கிராம்) | (ஹெக்டேயர்) | (கி.கிராம்) |
| அலகொல்ல | 56 | 6,765 | 56 | 8,584 |
| கொட்டகஹ | 267 | 26,974 | 267 | 34,161 |
| கோமர | 76 | 12,633 | 69 | 8,040 |
| ஹாகல | 134 | 17,662 | 134 | 13,691 |
| ஹெயாபார்க் | 144 | 32,529 | 144 | 38,935 |
| ஹுன்னஸ்கிரிய | 17 | 1,960 | | 3,855 |
| கலேபொக்க | 128 | 15,282 | 112 | 16,594 |
| மிட்லன்ட் | 27 | 3,030 | 27 | 2,650 |
| நிக்கொலஓய | 40 | 2,090 | 40 | 439 |
| ஓபல்கல | 52 | 1,717 | 52 | 1,350 |
| ரங்கல | 110 | 31,957 | 110 | 37,339 |
| மொத்தம் | 1,052 | 152,599 | 1,011 | 165,638 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வெளித்தரப்பு பெருந்தோட்ட செய்கையாளர்களால் 2013 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த பச்சை தேயிலை கொழுந்துகளுக்குரிய பூர்த்தி செய்யப்பட்ட தேயிலையான 165,638 கிரோ கிராம் உடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின்

உற்பத்தி 152,599 கிலோ கிராம் ஆக இருந்தமையால் 13,039 கிலோகிராம்களால் அதாவது 8 சதவீதத்தினால் உற்பத்தி குறைவடைந்திருந்தது.

(ii) வெளித்தரப்பு பெருந்தோட்ட செய்கையாளர்களால் நிர்வகிக்கப்படும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 1052 ஹெக்டேயர் காணியில் வருடாந்த நியம உற்பத்தி 1,826,798 கிலோ கிராம்களாக இருக்க வேண்டிய போதிலும், வெளித்தரப்பினரால் அதில் 8 சதவீதமே உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

(iii) தோட்டங்களின் உற்பத்தி இலக்கு மற்றும் செயலாற்றல் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2014 | | | 2013 | |
|---|---|---|---|---|---|
| **தோட்டத்தின் பெயர்** | **மதிப்பிடப்பட்ட உற்பத்தி** | **உள்ளவாறான பெறுமதி** | **அடையப் பெற்ற இலக்கு** | **மதிப்பிடப்பட்ட உற்பத்தி** | **உள்ளவாறான பெறுமதி** |
| | (கி.கிராம்) | (கி.கிராம்) | % | (கி.கிராம்) | (கி.கிராம்) |
| அலகொல்ல | 320,000 | 168,836 | 53 | 250,000 | 193,647 |
| கொட்டகஹ | 60,000 | 42,009 | 70 | 60,000 | 55,542 |
| கல்பிஹில்ல | 240,000 | 148,581 | 62 | 243,000 | 193,569 |
| கோமர | 150,000 | 110,132 | 73 | 153,000 | 123,390 |
| ஹாகல | 250,000 | 150,111 | 60 | 230,000 | 175,972 |
| ஹெயாபார்க் | 75,000 | 55,821 | 74 | 75,000 | 71,532 |
| ஹுன்னஸ்கிரிய | 175,000 | 97,148 | 56 | 190,000 | 112,754 |
| கலேபொக்க | 539,640 | 294,625 | 55 | 540,000 | 396,854 |
| மிட்லன்ட் | 201,000 | 116,075 | 58 | 222,470 | 191,841 |
| நிக்கொலாஓய | 64,000 | 35,110 | 55 | 12,000 | 7,916 |
| ஓபல்கல | 100,000 | 65,790 | 66 | 100,000 | 88,821 |
| ரங்கல | 200,000 | 117,991 | 59 | 210,000 | 150,463 |
| மொத்தம் | **2,374,640** | **1,402,229** | **59** | **2,285,470** | **1,762,301** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் ஒவ்வொரு தோட்டத்திற்கும் வழங்கப்பட்டிருந்த இலக்குகளிற்கிடையே மூன்று தோட்டங்கள் தவிர எஞ்சிய அனைத்து தோட்டங்களின் செயலாற்றல் 53 சதவீதம் முதல் 66 சதவீதமான அளவில் காணப்பட்டன.

(ii) 2013 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தினால் ஒவ்வொரு தோட்டத்திற்கும் வழங்கப்பட்டிருந்த இலக்கில் பூர்த்தி செய்யப்பட்ட தேயிலை உற்பத்தி இலக்கை அடைந்து கொள்வதற்கு ஒரு தோட்டத்திற்கும் முடியாமல் இருந்த போதும் அது தொடர்பாக முறையான ஆய்வொன்றில்லாமல் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது உயர் இலக்கொன்று வழங்கப்பட்டிருந்தது.

(உ) 2013 மற்றும் மீளாய்வாண்டில் ஒரு கிலோ தேயிலையின் உற்பத்திக் கிரயம் (COP) மற்றும் சாதாரண விற்பனைப் பெறுமதி (NSA) பின்வருமாறு இருந்தது.

| தோட்டத்தின் பெயர் | 2014<br>உற்பத்திக் கிரயம் | <br>சராசரி விற்பனைப் பெறுமதி | <br>பங்களிப்பு | 2013<br>உற்பத்திக் கிரயம் | <br>சராசரி விற்பனைப் பெறுமதி | <br>பங்களிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| அலகொல்ல | 345 | 270 | (75) | 332 | 241 | (91) |
| கொட்டகல | 659 | 287 | (372) | 527 | 248 | (279) |
| கல்பிஹில்ல | 317 | 269 | (48) | 359 | 268 | (91) |
| கோமர | 355 | 265 | (90) | 416 | 296 | (120) |
| ஹாகல | 353 | 284 | (69) | 348 | 277 | (71) |
| ஹெயாபார்க் | 410 | 264 | (146) | 365 | 227 | (138) |
| ஹுன்னஸ்கிரிய | 408 | 267 | (141) | 423 | 267 | (156) |
| கலேபொக்க | 536 | 311 | (225) | 445 | 280 | (165) |
| மிட்லேன்ட் | 507 | 328 | (179) | 418 | 300 | (118) |
| நிகொலாஓய | 442 | 327 | (115) | 533 | 393 | (140) |
| ஓபல்கல | 349 | 332 | (17) | 322 | 305 | (17) |
| ரங்கல | 461 | 277 | (184) | 442 | 285 | (157) |

மேற்படி அட்டவணையின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு தோட்டத்திலும் ஒரு கிலோ தேயிலையின் சராசரி விற்பனை விலையை மிகைத்த உற்பத்திக் கிரயம் காணப்பட்டது.

(ஊ) தோட்டங்கள் அமைந்துள்ள மாத்தளை மற்றும் கண்டி மாவட்டத்திற்குரித்தான வலயத்தின் 05 தனியார் தொழிற்சாலைகளின் ஏலத்தில் தீர்மானிக்கப்பட்ட ஒரு கிலோ தேயிலையின் சராசரி விலை ரூபா 555 ஆக இருந்ததுடன், கூட்டுத்தாபனத்தின் தொழிற்சாலைகளில் மீளாய்வாண்டின் சராசரி விலை ரூபா 323 ஆக இருந்தது. இவ்வாறு விலை மட்டம் குறைவது தொடர்பில் கொய்யப்பட்ட கொழுந்தின் தரத்தில் காணப்படும் குறைபாடுகள், தொழிற்சாலைகளில் காணப்படும் இயந்திரங்களின் நிலைமை மற்றும் முகாமைத்துவ பலவீனங்கள் பிரதான காரணங்களா இருந்தன.

## 3.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வலஹன்துவ தோட்டமத்தை தேயிலை சக்தி நிதியத்தின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கும் போது சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ரூபா 1,970,172 தொகை செலுத்த வேண்டிய பணிக்கொடை தொகையை கூட்டுத்தாபனம் செலுத்தி முடிவடைந்திருந்த போதிலும், தேயிலை சக்தி நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் வலஹன்துவ தோட்டத்தின் தேயிலை கொழுந்து மீளாய்வாண்டின் போது மாதோல தேயிலை தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், இரு தரப்பினருக்குமிடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

## 3.3 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

கூட்டுத்தாபனத்தினால் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை ஓபல்கல மற்றும் மிட்லன்ட் தோட்டங்களில் 98.5 ஹெக்டேயரில் ஆரம்பிக்கப்பட்ட சிறு ஏற்றுமதி பயிர் செய்கைக்காக முறையே ரூபா 15,468,811 தொகையும் ரூபா 2,351,908 செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அச்செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

## 3.4 பதவியணியினர் நிர்வாகம்

கூட்டுத்தாபனத்தின் பதவியணியினர் மற்றும் பதவியணியினர் ஆட்சேர்ப்பு செயற்பாடு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

இயந்திர உபகரணங்களை முறையாக பராமரிக்காத காரணத்தினால் கோமர தொழிற்சாலை 2014 சனவரி முதல் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன், ரங்கல தேயிலை தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளை மீளாய்வாண்டின் போது தொடர்ச்சியாக மேற்கொள்ள முடியாமல் இருந்தது.

## 3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மிட்லன்ட் தோட்டத்தினுள் சேவையில் ஈடுபட்டிருந்த 9 உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் மே முதல் நவம்பர் வரை சேவைக்கு அறிக்கையிடாமல் இருந்ததுடன், குறித்த காலப்பகுதிக்காக ரூபா 1,377,462 சம்பளம் அந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தின் பிரகாரம் 14 தோட்டங்கள், பிரதேச அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தின் சகல பிரிவுகளையும் மேவுகை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் 4 தோட்டங்களினதும் தலைமை அலுவலகத்தினதும் உறுதிச்சீட்டு பரிசோதனை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வினால் தமது திட்டமிடப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கோவைகளை பராமரித்தல் | மூல ஆவணங்கள் முறைப்படி பராமரிக்கப்பட்டிருக்காமை. |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதிடப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதை மேற்பார்வை செய்தல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், செயலாற்றலை மேம்படுத்துவதற்குரிய தொழில்நுட்ப மற்றும் செயற்பாடுகள் பயன்படுத்தப்படாமை. |
| (இ) | ஊழியர் முகாமைத்துவம் | ஊழியர்களுக்கிடையே முறைப்படி வேலைப் பகிர்வு மேற்கொள்ளப்படாமை, வருகைக் குறிப்புக்களை பேணாமை மற்றும் வெளிக்கள துண்டுப் பயன்பாடு தொடர்ச்சியாக மேற்கொள்ளாமை. |
| (ஈ) | உள்ளக் கணக்காய்வு | உள்ளக் கணக்காய்வு திட்டம் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செயற்படுத்தப்படாமை. |
| (உ) | கணக்கீடு | இங்கிரிய தோட்டத்திற்காக பேரேட்டுக் கணக்குகள் பேணப்படாமை. |
| (ஊ) | உடன்படிக்கை நிர்வாகம் | தேயிலை கொழுந்து விற்பனை தொடர்பாக உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமை. |